மதிப்பு ரூ. 908·26. பொருள்களை விற்றுவந்த விவரம் இல்லை. இரண்டு வகைத் திட்டங்களின் கீழ் வந்த பொருள்கள் மட்டும் ஏலம் விடப்பட்டிருக்கின்றன.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இந்தப் பொருள்கள் விற்பதிலே அங்கிருக்கக்கூடிய இன்ஸ்பெக்டர்கள் "மிஸ்யூஸ்" பண்ணினார்கள் என்ற புகார் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி எவ்வித புகாரும் வரவில்லை. அதுபற்றி கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டினால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 399வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நாகபட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சி பள்ளியில் கடந்த இரண்டாண்டுகளாக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே தகராறுகள் காரணமாக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால் அதனை ஒழுங்குபடுத்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆசிரியர் மாணவர்களிடையே சச்சரவு இருந்தது உண்மை. ஆனால் பள்ளியில் பயிற்சி பாதிக்கப்படவில்லை.

(இ) சச்சரவு பற்றி விசாரணை செய்யப்பட்டு, ஒழுங்கை நிலைநாட்ட சில ஆசிரியர்கள் வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர்களின் இல்லங்களுக்கு மராமத்து.

* 400 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கனம் முதல் அமைச்சர், கனம் பொதுப்பணித் துறை அமைச்சர், கனம் அரிஜன நலத்துறை அமைச்சர் ஆகியோர் இல்லங்களுக்கு கட்டடம் மற்றும் வசதிகள் செய்வதற்கு அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சபை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : On a point of order, Sir. A similar question was answered yesterday in the Upper House. Whether it is Lok Sabha or Rajya Sabha or Lower House or Upper House, the normal convention is that, when an answer is ready, it should first be placed before the Lower House. Obviously the answer was ready long ago. It should be placed here first and then only it should be placed in the Upper House. That has been the convention. I wish to draw the attention of the Chair to it.

MR. SPEAKER : As the Hon. Member has drawn the attention of the Chair, I would ask him to leave it at that, because the listing of the questions is the responsibility of the Chair and not of the Minister.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிட வேலைகளைச் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அரசாங்கஅதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்களா ? அப்படி அவர்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்

---

a 664–668-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1967 ஜூலை 18]

தால், அவர்களுடைய உழைப்பையும், மேற்பார்வையையும் கருதி 15 சத விகிதம் சூபர்விஷன் சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அந்தத் தொகையையும் சேர்த்துத் தான் இந்தக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லாம் சேர்த்துத்தான் அந்தக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முடிவாக இன்னும் கணக்குத் தரப் படவில்லை. அமைச்சர்கள் அதிகம் தந்ததாகவும் இருக்கலாம் அல்லது அமைச்சர்கள் தர வேண்டியதாகவும் இருக்கலாம். முடிவான கணக்குப் படி செய்யப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், சொந்த வீடுகள் இருக்கும் அமைச்சர்களுக்கு அந்த வீட்டு வசதிகள், பராமரிப்பு வசதிகள் அரசாங்கச் செலவில் தொடர்ந்து செய்துகொள்ள முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் சட்டபூர்வமாக விதிகள் செய்ய வேண்டுமென்று யோசனை செய்ததா? இதை அரசு பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சொந்த வீடுகள் இருக்கும் அமைச்சர்களுக்கு, அந்த வீடுகளுக்கான செலவுகள்—மெயின்டனன்ஸ்—மற்ற வசதிகளுக்கு அரசாங்கத்தினுடைய பணமே தரப்பட வேண்டுமென ஒரு தீர்மானத்தை முன்வைத்து, அதற்கான கட்டுகள் எல்லாம் முந்தைய அரசாங்கத்தில் தொடங்கப்பட்டன. ஆனால் இந்த அரசு அது தேவையில்லையென்று புறக்கணித்துவிட்டது.

திரு. இல. பலராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இது போன்ற உதவிகளை அங்கத்தினர்களுக்கும் விஸ்தரிக்க இந்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அமைச்சர்களைப் பொறுத்த கேள்வி அல்ல. கனம் அங்கத்தினர்களும் அமைச்சர்களைப் போலவே சொந்த செலவில் செய்துகொண்டால், அதை இந்த அரசு தடுக்காது.

திரு. எஸ். முருகையன் : சார், சென்ற ஆட்சியின் அமைச்சர்களுக்குச் சொந்த வீடுகள் இருந்தும், வீட்டு அலவன்ஸ் வாங்கிய அமைச்சர்கள் எத்தனை பேர்? மற்றும் அவர்களுக்குத் தரப்பட்ட பர்னிச்சர் வகைகளைத் திருப்பிக் கொடுக்காத அமைச்சர்கள் எத்தனை பேர்? இப்போதிருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கு மேஜை, நாற்காலி போன்ற பர்னிச்சர்கள் வழங்கப்பட்டுள்ளதா? முந்தைய அரசாங்கத்தில் இருந்த எதிர்க் கட்சித் தலைவருக்கு அந்த வசதிகள் எல்லாம் அளிக்கப்பட்டனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கனம் உறுப்பினர் இந்தக் கேள்விகளை எல்லாம் இணைத்துக் கேட்கிறார். முதலாவதாக, சென்ற ஆட்சியில் அமைச்சரவையிலிருந்த எல்லா அமைச்சர்களுக்குமே சொந்த வீடுகள் இருந்தும், வீட்டு அலவன்ஸ், கார் அலவன்ஸ், முதலியவை தரப்பட்டன. மற்றும் அமைச்சர்களுக்கு வேண்டிய மேஜை, நாற்காலி போன்ற பர்னிச்சர்களும், மின்சாரவிசிறி போன்றவைகளும் வாங்கப்பட்டன. அவைகள் எல்லாம் அவர்களுடைய பதவிக்காலம் முடிவடைந்ததும் அரசிடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்ற விதிப்படி தரப்பட்டிருந்தன. அப்படியே ஒருவர் தவிர எல்லா அமைச்சர்களும் பர்னிசர்களைத் திருப்பித் தந்துவிட்டனர். சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி அம்மையாருக்கு கிட்டத்தட்ட 8 ஆயிரம் மதிப்புள்ள பொருள் தரப்பட்டது. அதில் சுமார் 4,740 ரூபாய் மதிப்புள்ள வாட்டர் கூலர்-ஐ மட்டும் இன்னும் ஜோதி அம்மாள் அவர்கள் திருப்பித் தரவில்லை.

இரண்டாவதாக, இப்போதுள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கு மேஜை, நாற்காலி போன்ற மற்ற வசதிகள் ஜனநாயக முறைப்படி அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்பிருந்த எதிர்கட்சித் தலைவருக்கு, அவர்களுடைய ஜனநாயக முறைப்படி கொடுக்கப்படவில்லை.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் தங்களுடைய சொந்த பங்களாக்களில் இருந்து, அதை அரசாங்க உத்தியோகஸ்தர்களை வைத்து மராமத்து செய்துகொண்ட பிறகு, என்ன செலவாகிறது என்று பார்த்து

அமைச்சர்கள் கொடுத்திருப்பது நியாயமாக இருப்பினும்கூட, இம்மாதிரியான சந்தேகத்திற்கெல்லாம் இடங்கொடுக்காமல், அரசாங்க உத்தியோகஸ்தர்களை வைத்துப் பயன்படுத்துவதைவிட, அமைச்சர்கள் சக்தி படைத்தவர்களாக இருப்பதால், அவர்களே கையிலுள்ள பணத்தைச் செலவழித்து செய்துகொள்ளாமல் என் இந்தச் சந்தேகத்திற்கு ஆளாக வேண்டும்? இனிமேலாகிலும் அப்படி நடந்துகொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : யாரோ சந்தேகத்திற்கு ஆளானதாக, நண்பர் விநாயகம் அவர்கள் உருவகிறார். யாரும் அப்படி ஆளாகவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுகாதார அமைச்சர் ஜோதி அம்மாள் அவர்கள்கூட ரூபாய் 1,600 செலவில் ஓர் அறை கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கட்டித் தந்திருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களுக்கான உழைப்புக்கும் சேர்த்து அதற்கான செலவை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

திரு கொளத்தூர் கோதண்டம் : இப்போதுள்ள அமைச்சர் வீடுகளில் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன, அதேபோல் பழைய அமைச்சர்களின் வீடுகளில் எவ்வளவு ரூபாய் அளவுக்கு பர்னிசர், மற்ற வசதிகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய அமைச்சர்களுடைய வீடுகளில் திரு. கக்கன் அவர்களுடைய வீட்டிற்கு ரூபாய் 15,496 அளவுக்கு மேஜை நாற்காலி போன்ற சாமான்கள், திரு. மஜீத் அவர்களுடைய வீட்டில் ரூபாய் 15,154 அளவில் மேஜை, நாற்காலி போன்ற சாமான்கள், திரு. பூவராகன் அவர்கள் வீட்டில் ரூபாய் 19,535 செலவில் நாற்காலி, மேஜை போன்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 15 ஆயிரம், 19 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அடிப்படையில் வீட்டுக்கு சாமான்கள் வாங்கிக் கொடுத்திருப்பதும், மராமத்து செய்வதும் என்றால், இவர்கள் பரம ஏழைகளா ? அவர்கள் ஏழைகள் என்று எழுதிக் கொடுத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து, 'ரைட் ஆப்' செய்துகொடுங்கள். பெரிய லட்சாதிபதியாக இருந்துகொண்டு, லட்சாதிபதி என்று சொல்லிக்கொள்கிறார்களே அவர்களிடம் கண்டிப்பாக இந்தப் பணத்தை வசூல் செய்வதற்கு தகுந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் பதிலைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்டார் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட சாமான்கள் அந்தப் பங்களாக்களில் இருந்தன. அவர்கள் வெளியேறிய பிறகு அந்தச் சாமான்கள் அப்படியேதான் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : மேற்கூறிய மூன்று அமைச்சர்கள், திரு. கக்கன், திரு. மஜீத், திரு. பூவராகன் இவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்களாக்களில் இருந்துகொண்டு, அரசாங்கத்திற்கு வேலை செய்கிற காரணத்தாலே அந்த பர்னிசர்கள் எல்லாம் அரசாங்கத்தின் சார்பில் வாங்கிக் கொடுக்கப்பட்டு, அரசாங்க வேலைக்கே பயன்படுத்திக்கொண்டு வந்தார்களே தவிர, சொந்த வேலைக்குப் பயன்படுத்தவில்லை. அவர்கள் வீடுகளைக் காலிசெய்து விட்டு வரும்போது ஒரு துரும்பு கூட கொண்டுவரவில்லை யென்பதை அரசாங்கம் உணருகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் பதிலில் ஒரு பகுதியைத்தான் சொன்னேன். அடுத்த பகுதியைப் பெருந்தன்மையாக விட்டுவிட்டேன். நண்பர் விநாயகம் அவர்கள் விடுவதாக இல்லை. அரசாங்க மாளிகையில் இருந்தவர்கள் மட்டும் பயன்படுத்திக்கொண்டார் என்பது அல்ல. சொந்த வீட்டில் இருந்த திரு. காமராஜ் அவர்களுக்கு 4,066 ரூபாய், திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு ரூபாய் 4,696 மதிப்புள்ள சாமான்கள் கொடுக்கப்பட்டு, அவைகளை அவர்கள் பதவி விலகிய பிறகு திரும்பக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் திருமதி ஜோதி அம்மையார் மட்டும் இன்னும் கொடுக்கவில்லை.

1967 ஜூலை 18]

திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கண்டுள்ளவாறு முதல் அமைச்சர் அவர்களும், பொதுபணித்துறை அமைச்சர் அவர்களும் பார்வையாளர்களின் வசதிக்காக, பாதுகாப்பாளர்களின் வசதிக்காக ஆன செலவையும், மேலும் மின்சார விசிறிகள், மின்சார விளக்குகள் ஆகியவற்றிற்கான செலவையும் அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டார்களே, இதுபோல பழைய அமைச்சர்களும் ஏதாவது பணம் கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 9-30

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முதல் அமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் இவற்றிற்கான செலவுகளை அரசாங்கத்திற்குத் தருவதாகச் சொல்லித் தந்துவிட்டார்கள். ஆனால் பழைய அமைச்சர்கள் பதவியில் இருந்து விலகுகிறபோது வாக்களித்தவாறு தந்திருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாள் சுகாதார அமைச்சரிடம் தங்கிவிட்ட வாட்டர் கூலர் பற்றிச் சொன்னார்கள். அதன் மர்மத்தை விளக்குவார்களா? அதைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எட்டாயிரம் ரூபாய் பெருமான முள்ள சாமான்கள் முன்னாள் சுகாதார அமைச்சரிடம் இருந்தன. அவற்றில் நாற்காலி, மேசை போன்ற 4 ஆயிரம் பொருமான பர்னிசர்கள் திருப்பித் தரப்பட்டுவிட்டன. நாலாயிரம் ரூபாய் பொருமான வாட்டர் கூலரையும் திரும்பத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த நாலாயிரம் ரூபாய் பொருமான சாமானை அரசாங்கம் திரும்பப்பெறுவதாக இருக்கிறதா? அல்லது விட்டுவிட அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விட்டுவிடுவதாக இல்லை. வசூலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் மூன்று அமைச்சர்களைப் பற்றிய விவரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற அமைச்சர்களைப் பற்றிய செலவுகள் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏராளமான அளவுக்கு அந்த அரண்மனைகளில் பழைய பர்னிசர்களை விட்டுபோயிருக்கிறார்கள். அதையே மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

திரு. வ. ஜார்ஜ் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் கொடுத்திருக்கிற செலவினங்கள் சர்விஸ் சார்ஜ் உள்படவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு முன்பே பதில் சொல்லியிருக்கிறேன். உட்படத்தான்.

திரு. செ. பால்சுப்பிரமணியன் : முன்னால் இருந்த கப்பல் போன்ற கார்கள் கண்ணில் காணப்படவில்லையே, அவைகள் என்ன ஆயின?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்து, மத்திய சர்க்காரில் இருந்து வருகிற விருந்தினர்களை அழைத்து, கொண்டுபோய் விடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்போதுள்ள அமைச்சர்கள் சிறிய கார்களையே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

Thiru T. MARTIN : Sir, from the answer given by the Hon. Minister, I understood that these works were supervised by the Government officials. Now, the list which has been prepared and presented before this House does not include the remunerative

charges regarding the work done by these officials. Will this Government give another list containing the remunerative charges which are debitable against them ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Ministers are not expected to reimburse the expenses incurred in their official capacity and the Ministers have chosen magnanimity and I expect hon. Members also to respond to that magnanimity instead of entering into peevishness.

*401 வினா—திரு. அ. பொ. அரசு : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் அன்னாரின் வீட்டிற்கு அரசினர் செலவில் ஏதேனும் மராமத்து செய்யப்பட்டதா, அல்லது மேசை, நாற்காலி, விரிப்புகள் போன்றவை அளிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில் எந்தெந்த வருடங்களில் எவ்வளவு ரூபாய்க்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கைa வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, as suggested by the Hon. Chief Minister, let us not enter into peevishness.

Baby Taxis

* 402 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to allow four passengers to travel by baby taxis ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. கே. வினாயகம்: தலைவர் அவர்களே, இந்த பேபி டாக்சிகளின் சொந்தக்காரர்கள் எல்லாம் குறிப்பிட்ட இலாக்கா அமைச்சர் அவர்களைப் பார்த்து "நான்கு பேர்களை ஏற்றச் சொல்வது சரியல்ல, அப்படி ஏற்றுவதன் காரணமாக அந்தக் கார்களின் ஜீவித காலம் குறைந்துவிடும், கார் பாகங்கள் சீக்கிரம் தேய்ந்துவிடும், ஆகவே நான்கு பேர்களை ஏற்றிக் கொண்டாகவேண்டும் என்கிற உத்தரவைப் போடக்கூடாது" என்பதாகத் தெரிவித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்? அவற்றை எல்லாம் தேசீயமாக்கப் போகிறோம் என்பதாக மிரட்டுவதைவிட்டு, அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசீயமாக்குகிறோம் என்பது மிரட்டல் அல்ல. ஒரு காரில் எத்தனை பேர்கள் ஏற முடியும் என்று முதலாளிகள் சொல்வதைவிட, அந்தக் காரின் உற்பத்தியாளர் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதாகக் கருதித்தான் அரசு அவர்களிடம் கேட்டிருக்கிறது. ஒன்றிரண்டு நிர்வாகங்களிடம் இருந்து பதில் வந்து விட்டது. மற்ற பதில்களும் வந்த பிறகு அவைகள் பரிசீலிக்கப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி இந்த அரசு ஆராயும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கார் சொந்தக்காரர்கள் குடும்ப சகிதமாக நீண்ட தூரம் போகும்போது எத்தனைபேர்கள் வேண்டுமானாலும் ஏற்றிக்கொள்கிறார்கள். அதிகப் பணம் கொடுப்பதாகச் சொன்னாலும்

a 668–669-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.